


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஜூன்- 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஜுன் - 03.06.2019

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்







# தேசிய நிகழ்வுகள்

- **பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அமைச்சரவை 60 வயதை கடந்த சிறிய சில்லறை வணிகர்கள் (ம) கடைக்காரர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.3000-ஐ வழங்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது**

- ரஷ்யா, சீனா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து எதிர்ப்பு இருந்தபோதிலும், ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் (UNSC) தென் சூடானில் ஒரு ஆண்டுக்கு ஆயுதத்தடையை நீட்டியது
  - இந்த நடவடிக்கை 2020 மே 31வரை அன்று மீண்டும் புதுப்பிக்கப்படும்

- இந்திய மருத்துவ கவுன்சில் (ICMR) மின் சிகரெட் உட்பட மின்னணு நிகோடின் டெலிவரி அமைப்புகள் (ENDS) மீதான முழுமையான தடைக்கு பரிந்துரை செய்தது
  - தற்போது கிடைக்கப்பெறும் அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் இது பரிந்துரைக்கப்படுகிறது
  - 31 மே அன்று அனுசரிக்கப்பட்ட உலக புகையிலை ஒழிப்பு தினத்தின் போது, ICMR, ENDS மற்றும் மின் சிகரெட்டுகளின் தீங்கு விளைவிக்கும் அபாயத்தை பற்றி வெள்ளை அறிக்கை வெளியிட்டது.

- நீர்வள ஆதாரங்கள், நதி அபிவிருத்தி மற்றும் கங்கை புனரமைத்தல், குடிநீர் மற்றும் சுகாதார வசதிக்கான அமைச்சகங்களை இணைத்து ஜல் சக்தி Jal Shakti என்ற புதிய அமைச்சகத்தை மத்திய அரசாங்கம் உருவாக்கியுள்ளது.
  - **ஜல் அமைச்சகத்தின் தலைவர் கஜேந்திர சிங் ஷெகாவத் ஆவார்**
  - இந்த நடவடிக்கை ஒரு துறையின் கீழ் நீர் மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டின் அனைத்து அம்சங்களையும் கொண்டுவரும் என்பது குறிப்பிடத்தக்கது

- தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் NSSO கடந்த 2017-18 ஆம் ஆண்டு வேலையின்மை குறித்து நடத்தப்பட்ட ஆய்வில், வேலையின்மை நிலவரம் 6.1 சதவீதம் அதிகரித்துள்ளது. இது கடந்த 1972-73ம் ஆண்டுக்குப்பின் மிகப்பெரிய உயர்வாகும் என

ஊடகங்களில் செய்தி வெளியானது

- முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கஸ்தூரிரங்கன் தலைமையிலான குழுவானது தேசிய கல்வி கொள்கை (NEP) திட்டத்தை மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ரமேஷ் போக்ரியாலை நிஷாங்கிடம் புது டெல்லியில் சமர்ப்பித்துள்ளது
    - தற்போதுள்ள NEP 1986 ஆம் ஆண்டில் கட்டமைக்கப்பட்டு, 1992 இல் திருத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

## விருதுகள்

- **உலக சுகாதார அமைப்பு (WHO) ராஜஸ்தான் அரசாங்கத்தின் மருத்துவ மற்றும் சுகாதார துறைக்கு, புகையிலைக்கான கட்டுப்பாட்டில் ராஜஸ்தான் சாதனைகளை அங்கீகரித்து 2019 ஆம் ஆண்டுக்கான புகையிலை கட்டுப்பாடு விருது வழங்கப்பட்டுள்ளது (Tabacco Control Award For year 2019)**

## முக்கிய தினங்கள்

- **ஜுன்-1 சர்வதேச பால்தினமாக அனுசரிக்கப்படுகிறது**
    - 2019 ஆம் ஆண்டின் கருத்துரு
    - பாலை குடிக்கவும்: இன்றும் மற்றும் தினமும்
    - Theme for 2019: Drink milk: Today & everday"
    - 2001 ஆம் ஆண்டு முதல் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பால் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

We Shine Academy™